V. Swaminatha Iyer Esqr. 6435
Kumbakonam College

for favor of opinion.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41

GUNAMÂLIKÂI

OR

THE TRIUMPH OF CHASTITY

GUNAMÂLIKÂI

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY.
TIRUVANMIYUR, MADRAS-41.

THE TRIUMPH OF CHASTITY.

6935

BY

N. R. TATACHARI, B.A.

'சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை'—திருக்குறள்.

Madras:
THOMPSON & CO.,
1902.

[All Rights Reserved.]

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41

DEDICATED

TO

My Mother and to my Father

AS A SMALL TOKEN OF

my abiding love and gratitude

PREFACE.

This little book is an adaptation to oriental taste of an English poem—Milton's Comus. The difficulty of such a rendering as will preserve at least the essential features, if not all the subtle graces, of the poem, would have completely deterred me from attempting the task, were it not that my only motive was to bring within the reach of my countrymen the sublime and beautiful thoughts of one of the greatest poets of Great Britain.

2. I do not plead this inherent difficulty of the task as an apology for the shortcomings of my present venture. There must be some of them, for which my incompetency has to be responsible. While considering work like this to be one of the proper means of improving Tamil Literature in its present transitional stage, I am aware, how little it is that I can do in the matter, and how even that little may not be what it ought to be. I shall therefore heartily welcome all suggestions towards the improvement of this, my maiden endeavour to enrich Tamil Literature from outside sources.

3. I have to thank Prof. M. Rangachariar, M.A., of the Presidency College, not only for the introduction, but also for many valuable suggestions which have enriched the present work. Indeed it is not too much to say that the book owes its present form to him.

4. For the metrical sings in the book, I have to thank my old teacher, Mr. Gopala Charriar of the Christian College. I also beg to acknowledge my indebtedness to Messrs. Sriranga Chariar and Srinivasa Chariar for the valuable help they rendered while the book was in the press.

TRIPLICANE,
7th March, 1902.

N. R. K. T.

INTRODUCTION

THIS small Tamil work is mainly a prose renderin g of Milton's Comus. It is, however, not a strict translation of the English poem ; it is both a translation and an adaptation of the story as given by Milton to suit the taste of the Tamil reader. The author, being an old pupil of mine, read to me his work while it was in manuscript and asked me for suggestions to improve it ; and from the intimate knowledge I have thus been able to acquire of it, I am able to state that in adapting the story to the Indian reader, the beauty in the plo t and the aim of the English original have been as little njured as possible. In Milton's Comus the imagery is almost oriental in its vivid coloration and profusion of eeling and his ideal of womanhood comes very near o that ancient Indian ideal which is so well depicted in our Epic and Puranic Literature. Thus the work lent itself very well to the treatment of the Tamil translator, and as a result we have an interesting, though smal l addition to Tamil grose Literatue of the modern type ; and I have no doubt that the success of this endeavour will lead the author to work more and more in the field of popular enlightenment and Vernacular Literature.

M. RANGACHARYA,

Professor of Sanskrit

and Comparative Philology,

Presidency College

TRIPLICANE,
7th March 1902.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41.

சென்னை

பிரஸிடென்ஸி காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர்

புன்னை-மாடபூசி ஸ்ரீநிவாஸாசாரிய ரவர்களியற்றிய

சிறப்புப்பாயிரம்.

தலைசால் கடல்சூழ் தரணிமா தினுக்கு
முகமெனப் பல்லோர் முன்னிய யூரோப்
கண்டந் தனக்குக் கவின்செயும் பொட்டென
எண்டிசை போற்று மெங்கி லாந்தினில்
கல்வியாற் பொருளாற் கனத்திறற் படையால்
வல்லமை வாய்ந்த வண்ணவாங் கிலேய
வரசாட்சியின்முனை யமர்ந்த நூல் வல்லான்
உரைசால் வாய்மைய னுள்ளத் தூய்மையன்
பாவலர்க் கிறைவன் பக்தியிற் சிறந்தோன்
காவலர் போற்றுங் கனஞ்செறி மில்டன்
என்னுமா கவிஞ னியற்கோமஸ்மாஸ்க்
தன்னியல் வகையைச் சார்ந்தவோர் நூலைத்
தமிழறி சான்றோர் தாமுணர்ந் துவப்ப
அமிழ்தினு மினிய வஞ்சொலா லமைத்துக்
குணமாலிகை யெனக்கொள் பெயரிட்டுப்
பணைமலி பார்மேற் பரவச்செய்தனன்
உம்பரும் வியக்கு முயர்புகழ் வாய்ந்த

கும்பகோ ணத்துட் குடியிருப்பு டையோன்
இரகுநாதா சாரெனும் பெயர்பெற்ற
வாகுரு தவத்தால் வந்துதித் திட்டோன்
தமிழுட னாங்கிலஞ் சதிருறக் கற்றோன்
கமழ்திருத் துளவணி கருடவாகனனார்
பத்தியிற் சிறந்த பரமவைணவன்
முத்தியி னாலெலா முடிவுற வாய்ந்தோன்
கோதா ரொழுக்கரு குமார
தாதா சாரியார் தகைப்பெய ரோனே

சிறப்புப்பாயிரம்.

'ஞானமாலிகை' எனப் பெயர்புனைந்த இத்தமிழ்ச் சிறுநூல், ஸ்ரீமான் என்.ஆர். தாதாசாரியர் பி.ஏ. அவர்களாலியற்றப்பட்டுச் "சுருங்கச் சொல்லல்" முதலிய பத்தழகையும், இயலிசை முதலாய மூத்தமிழையுங் கொண்டு படிக்கற்கினிமைபயக்கும் பான்மையதாய் விளங்காநின்றது. இது ஆங்கிலநாட்டின் கவிரத்னங்களில் ஒருவராய 'மில்டன்' என்பவரால் செய்யப்பட்ட 'கோமஸ்' என்னுமொரு நூல் வகையினின்றும் மொழிபெயர்க்கப்பட்ட தொன்றாயினும் இக்காலத்திற் கேற்பவும், இந்துநாடாகிய இந்நாட்டின சுவையுணர்ச்சிக்கியையவும் ரஸபாவ கற்பனாலங்காரங்களை ஏற்கு மிடங்களிற் கொண்டியன்றுளது. இன்னும் இது கற்பினையே மிகுதியும் வற்புறுத்திக் கூறும் சீரிய கருத்தது. இந்நூல், நாடகம், பிரகரணம் முதலியவற்றி னிலக்கணங்களைப் பெருது ஓரங்கமாத்திரையாய் நின்றமையின் "வியாயோகம்" எனப் பெயர்பெறலாம் என்ப.

இனி, இதனைப் படித்தலாற் சொல்வன்மையும், பாஷாஞானமு முண்டாவதுடன், தேய வியற்கையும் காலவியற்கையும் அறிதற்கு இஃதோர் கருவியாகலாம்.

இங்ஙனம்

தி. கோ. ஸ்ரீரங்காசாரியன்.

சர்ச் ஆப் ஸ்காட்லண்டு

மிஷன் காலேஜ் தமிழ் பண்டிதர்.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41

பிழை திருத்தம்.

	பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
சிறப்புப்பாயிரம் வசனநடை		15	பிரகரம்	பிரகரணம்
	7	25		
	8	13		
	15	14	சத்தத்தை	சத்தம்
	34	21	அளவின்	அளவின்றி
	43	2	கண்ணைன்	கண்ணனின்

தேவ புருஷன்.—*பிறகு கண்ணன் என்னும் யாதவ வேடம் தரிக்கின்றான்.*

மோகனன்.—*ஒரு மந்திரவாதி.*

அவன் பரிவாரங்கள்.—

குணமாலிகை.—*ஒரு மாது சிகாமணி.*

தேவப்பிரியன்.
பாலசுந்தரன். } *அவளது சகோதரர்கள்.*

வாஸந்தி.—*ஒரு வனதேவதை.*

குணமாலிகை.

காப்பு.

குணமா லிகைசரிதங் கூறத் துணையாம்
பணநா கணைமால் பதம்.

இடம்:—*காட்டின் ஒரு புறம்.* **காலம்:**—*மாலை.*

தேவ புருஷன்— (*ஆகாயத்தினின்றிறங்கி*), *ஜனங்கள் நன்னெறிபற்றி யொழுகின் தேவதைகளாகச் சிம்மாஸனம் பெறலாமென்று சிறிதுமெண்ணாமல் வீணாக வாணாளைக்கழிக்கும் இப்பாழ்ம பூமிக்கு மேல் நிர்மலமாய் விளங்கும் இந்திரலோகமே யானும் எனது சகதேவதைகளு மிருக்குமிடம். ஆனால் இவ்வுலகிலும் சன்மார்க்கவழியில்நின்று முத்திபெற விரும்பும் சிலர் இருக்கின்றார்கள். அவர்கள்பொருட்டே நான் எனது தேவ வேடத்தை நீக்கி இப்பாவ பூமிக்கு மானிடவேடம் பூண்டு வரவேண்டியிருக்கின்றது. இப்பொழுது என் காரியமோ:—*

வருணனுக் குரியவை சமுத்திரமும அதிலிருக்குந்தீவாந்தரங்களும். இத்தீவாந்தரங்களில், மேன்மைதங்கிச்சிறப்புற்று விளங்கும்இத்தீவின்

மேற்புறத்திலிருக்கும் வெகு பராக்கிரமும் காம்பீரியமுமுடைய ஜாதியாரைப் பய நயத்தால் ஆளும்பொருட்டு, நிறையும் நேர்மையுமுள்ள ஒரு பிரபுவை அவன் அனுபவித்திருக்கிறான். அப்பிரபுவுக்கு முடிசூட்டுவதைக் காணச் சாஸ்திரங்களிலும் இராஜவித்தைகளிலும் வல்ல அவரது அழகிய புதல்வர்கள் வருவார்கள். அவர்கள் வரும்வழி இவ்வடர்ந்த புதர் நிரம்பிய காட்டின் மார்க்கம்.

"இரவியின் கதிர்கள் நுழைதல் செய்தறியா" என்றும்
"பரிதியின் செல்வன் விரிகதிர்த்தானைக்
கிருள்வளை யுண்ட மருள்படு பூம்பொழில்" என்றும்

கூறியபடி மரங்கள் மிகுதியு மடர்ந்துள்ள அக்காட்டகம், கார்காலத்து அமாவாசையின் நள்ளிருள்போலக் கள்வர் முதலியோரும் கருத்திலச்சங் கொள்ளத்தக்கது. இதில் மரங்கள் அசைவதே, தன்னந் தனிச்செல்பவர்களை அச்சுறுத்தத்தக்கது. இத்தகைய காட்டில் அப்பாலகர்களுக்கு அபாயம் நேர்ந்து இடுக்கண் விளையுமென்று அவர்களைக்காக்க இந்திரனது கட்டளையினால் யான் இங்கு வந்தனன். இடுக்கண் யாதோவெனில், மந்திரங்களில் தேர்ந்து தன்னை அணுகுபவர்களையெல்லாம் பன்றியாக மாற்றும் சக்தியுடைய, சூரன் பெண்ணாகிய வைரோசநி என்பாள், 'மதிரன்' என்னும் பானக் கடவுள்மீது மோகங்கொண்டு, அவனைச்சேர்ந்து

மோகனன் என்னும் பிள்ளையைப் பெற்றனள். இப்புதல்வன் தாயினும் மிகவல்லவன். அவன் அநேக ஊர்களிலெல்லாம் திரிந்து இப்பொழுது இவ்வடவியில் இருந்துகொண்டு இவ்வழியில் சூரிய வெப்பத்திலடிபட்டு வருபவர்களின் தாகத்தைத் தணிக்கக் களங்கமற்று விளங்கும் நீரை ஓர் ஸ்படிக பாத்திரத்தில் குடிக்கக் கொடுக்கின்றான். அந்நீர் உள்ளே இறங்கவும் தேவஸ்வரூபம்போன்ற இம்மானிட உருவத்தின் முகம் கரடி புலி பன்றி ஆடு இவைகளின் முகமாக மாறிவிடும். வேறு விகார முண்டாவதில்லை. இவர்களோ, தங்கள் விகார ரூபத்தை அறியாராகி முன்னிலும் அதிக ரூபலாவண்ணிய சௌந்தரிய முடையவர்களாக எண்ணித் தங்கள் வீடு வாயில்கள் சிநேகர்கள் பந்துக்கள் யாவரையும் மறந்து ஆங்குக் கொட்டிலிலடைபட்டுச் சிற்றின்பத்தில் மூழ்கி உழல்பவராகின்றார்கள்.

ஆனால் இந்திராதிதேவர்களை வேண்டி நல்வழியில் நடக்கும் நல்லோர் யாவராகிலும் இவ்வழிச்செல்ல நேரிட்டால் யான் மின்னல்போல் ஆகாயத்தினின்றும் இழிந்து அவர்களுக்கு வழித்துணையாகி அவர்களைக் காப்பேன். இதற்கு முன் வானவிற்போல் ஒளி நிரம்பி விளங்கும் தெய்வத்தன்மைபொருந்திய உடையைக் களைந்து அரசன் மகுடாபிஷேகத்துக்குவரும் இப்

பாலகர்கள்வீட்டு இடையன் வேடம் பூண்டு குழலூதி வருவேன். இந்நிலையைப் பூண்டன்றே, அவர்களுக்குச் சரியான உதவி புரிய மாட்டுவேன். இதோ துஷ்டர்கள் அடிச்சத்தம் கேட்கின்றது. நான் மறைந்துகொள்ள வேண்டும்.

காலம்:—முதல்யாமம்.

(ஒரு கையில் மாத்திரைக்கோலும் மற்றொரு கையில் ஸ்படிக வேதியும் ஏந்தியுள்ள மோகனனும், மிருகங்கள் தலையும் மனிதர்கள் உடலும் தாங்கிய அவன் பரிவாரங்களும், கொட்டி முழக்கிச் சிற்றின்பத்திலாழ்ந்து கையிற் கொள்ளிகொண்டு வருகிறார்கள்.)

மோகனன்.—மாலைப்பொழுதாய் விட்டது. இடையர்கள் மாடுகளை ஓட்டிக்கொண்டு வீட்டுக்குச் சென்றுவிட்டார்கள். ஒற்றையாழியான் சோதிமயமான ரதமும் சுறுக்கொண்டு மேற்கடலில் ஆழ்ந்துவிட்டது. வயது முதிர்ந்தவரும், சிலம் முதிர்ந்தவரும் உறங்கும் வேளை வந்துவிட்டது. நம்மைத் தடுப்பவர்கள் யாருமில்லை. மடைதிறந்த கடல்போல யாம் அளவளாவிக்களிக்கும் காலம் இதுவே யாகும். இத்தகைய இரவு, வேனிலைக்கண்ட வேள் போலவும் கார்காலத்தைக் கண்ட கலாபமயில் போலவும், கன்றைக்கண்ட ஆவேபோலவும் யாம் களிகூரத்தக்கதேயாகும். வாருங்கள் நாம் நக்ஷத்திரங்களைப் போல் இமையாத நாட்டத்துடன் ஆடிப்பாடிக் களிப்போம்.

சந்திரனைப்பார்க்க மீன்கள் துள்ளுகின்றன. சமுத்திர தீரத்தில் தேவதைகள் நர்த்தநஞ் செய்கிறார்கள். இரவுக்கும் தூக்கத்துக்கு மென்ன சம்பந்தம்? விழித்திருந்தால் இரவிலிருந்த இன்பங்களை அநுபவிக்கலாம். 'காமத்தைக் காக்கக் கரையொன்று மின்றன்றோ'?

" சிறையு முண்டோ செழும்புனல் மிக்குழீஇ
நிறையு முண்டோ காமங் காழ்கொளின்"

வாருங்கள், நாம் நமது சிற்றின்பக் கூத்துக்களைத் தொடங்குவோம். அவைகள் வெளிப்பட்டாலல்லவோ பாபம். இரவிலோ நாம செய்யும் கிருத்தியங்கள் வெளிக்குவாரா. சிற்றின்ப நாயகியே! துர்நீதியே! மையிருள் வருவதற்கு முன் வெளி வாராத அம்மையே! நின்வரவை எதிர்பார்த்திருக்கும் எங்கள்பேரில தயவுகூர்ந்து தாமதி. கோட்சொல்லிச் சூரியன் வருமுன் உனக்குரிய கடன்களையெல்லாம் பெற்றுக் கொண்டேகு. வாருங்கள் எனது பரிவாரங்களே! கைகலந்து கூத்தாடுங்கள்.

(கூத்தாடுகிறார்கள்.)

ஓடுங்கள் ஓடுங்கள். இவ்விடத்தில் ஒரு கற்புடைய மாதின் அடிச்சத்தம் கேட்கின்றது. மரங்களிலும் புதர்களிலும் ஒளித்துக்கொள்ளுங்கள், அவள் நமது குழாத்தைக்கண்டு பயப்படுவாள். ஒரு மாதுசிகாமணி இக்காட்டில் இங்கள்ளிருளிற்சிக்கிக்கொண்டிருக்கின்றாள். எனது

மந்திர சக்தியினால் என்றாயினும் பதின்மடங்கு அழகிய மாதர்கூட்டம் என்னைச் சுற்றிலும் சேர்த்துக்கொள்வேன். எனது ஆடையும் இத்தலமும் அவளுக்கு ஐயமூட்டி ஓடச்செய்யாமலிருக்கும் பொருட்டு அவளது கண்ணை மயக்க இந்தச் சுக்குப்பொடியை ஆகாயத்தில் இறைப்பேன். (பொடியைத்தூவி) பிறகு நான் உற்றதுணைவனைப்போல நடித்து முகமனியம்பி மரியாதை வார்த்தைகள் பேசி மயக்கி அவள் மனதைக் கவர்ந்து என் வலைக்குட் சிக்கச்செய்வேன். இப்பொடி அவள் கண்ணிற்படவும், தன் கருமமே கண்ணாக உழைத்து வாழும் குடியானவன்போற் புலப்படுவேன். அவள் இதோ வருகின்றாள். நான் மெதுவாய் வழிவிட்டு ஒதுங்கி அவளை காரியம் யாதென்றறிவேன்.

(மறைந்து கொள்கிறான்.)

குண:—(அக்கூத்தின் ஆரவாரத்தைக்கேட்டு அவ்வழிச்சென்றுகொண்டே.) அச்சத்தம் இப் பக்கத்தினின்றே வந்தது. அது பட்டிக்காட்டுக்குடியானவர்கள் ஆடுமாடுகள் விருத்தியாகும்பொருட்டும், தானியங்கள் வளமாய் விளையும் பொருட்டும் தங்கள் இஷ்ட தெய்வத்தைக் களிகூர்ந்து கூத்தாடிக் கொண்டாடும் சத்தம்போலிருந்தது. இவ்வாறு அகாலத்திற் குடித்துக் களிக்குமவர்களைப் பார்க்கவிருப்பமில்லையே. ஆனால் வேறு எங்கே இவ்

வடர்ந்து இருண்ட காட்டில் வழி தெரிந்துகொள்வேன். நான் இம்மாளாவழி நடந்து களைக்கவும் என் சகோதரர்கள் என்னை இம்மாத்தடியில்விட்டு முதிர்ந்த பழமும் குளிர்ந்த நீருந் தேடி ஏகினார்கள். அவர்கள் போகும்பொழுது சூரியன் குடதிசை அடைந்தனன். பகலவனும் இங்ஙனம் என்னை இக் கடுங்காட்டில் தனியே விட்டுச் சென்றது யாது பற்றியோ! ஒருகால் தன் வெய்ய கிரணங்களால் நான் இங்ஙனம் களைப்படைந்தே னென்றெண்ணிக் கருணைகூர்ந்து மறைந்தனனோ? அன்றி, எனக்கு நீர் உண்பித்துக் களைப்பைத் தீர்க்கக் கருதித் தனது கரத்தை மேற்கடலில் நீட்டிச் சென்றனனோ? ஆ! யாதென்பேன்! எனது சகோதரர்கள் இப்பொழுது எங்கே யிருக்கின்றார்களோ? ஒருவேளை பழத்தையும் நீரையுந் தேடி வெகுதூரம் சென்றிருக்கலாம். அப்பொழுது பொறுமை கொண்ட இருள் மையச்சென்று அவர்களைக் கவிழ்ந்துகொண்டிருக்கலாம். ஏ கங்குலே! தாரைகளையும் மறைத்தனையே; என்ன கொடுமை செய்யக்கருதி இங்ஙனம் புரிந்தாய்! 'மதியிலா விசும்பும், செவ்வி மணமிலா மலரும், தண்ணீர் நதியிலா நாடும், செம்பொன் நரம்பிலா நாதயாழும், நிதியிலா வாழ்வும், தக்க நினைவிலா நெஞ்சும்,' என்றபடி யான ஒளியிழந்து கண்ணிழந்த பிராணிபோல இவ்வருமபெரும் காட்டிற் கலக்கமுற்று வருந்துகின்றேனே.

"இளையிருள் பரந்ததுவே
யெற்செய்வான் மறைந்தனனே ;
கதிரவன் மறைந்தனனே
காரிருள் பரந்ததுவே ;
பறவை பாட்டடங்கினவே
பகற்செய்வான் அடங்கினனே."

(என்று சொல்லிக்கொண்டே போக ஓரிடத்தில் அச்சத்தத்தின் அதிர்ச்சி மறுபடி காதிலேதாக்கவின்று)

இவ்விடத்திருந்தே அச்சத்தம் உண்டாயது. இன்னும் அச்சத்தத்தின் எதிரொலி காதைத் தாக்குகின்றது. ஆனாலும் இருளொழிய வேறொன்றும் பார்க்கிறேனில்லையே! எனமனதில பற்பல நினைவுகள உதிக்கின்றனவே, பேய்களும் பிசாசுகளும கூவுகின்றன போலவும் அழைக்கின்றன போலவும சைகைசெய்கின்றன போலவும் தோற்றுகின்றனவே. இக்காட்சிகளும் ஓசைகளும் யாவரையும் திடுக்கிடச் செய்யத்தக்கவையே. ஆனல் நீதிநெறி நிற்பவர்களை ஒன்றும் செய்யா. அவர்களுக்கு ரக்ஷகனும் அகத்துள்ள கர்மசாட்சி எக்காலத்தும அகலாது நின்று பாதுகாக்கும். விமலமான விசுவாசமே! மாசற்ற மனோரதமே! களங்கமற்ற கற்பே! உங்கள உருவத்தை விசதமாய்ப் பார்க்கிறேனே! இப்பொழுதன்றோ எனது ஐயம் நீங்கியது. தேவாதி தேவன் எனது உயிரையும் மானத்தையும் காக்கவேண்டி யிருப்பின் ஓர் ஒளிதிகழும் கந்தர்வனை அனுப்புவா னன்றோ!

(அச் சமயத்தில் ஆகாயத்தில ஒரு காந்தியுண்டாக, அதனை நோக்கி,) என் கண்தான் இங்ஙனம் பிர மிக்கின்றதோ அல்லது நான் பார்த்தகாந்தி மெய்தானோ! இவ்விருண்ட இரவில் கார்முகில் தன் ஒளிப்புறத்தைத் திருப்பியதோ? ஓ! நான பிரமிக்க வில்லை. ஆ! ஆ!! கார்முகிலே தனது ஒளிப்புறத்தைத்திருப்பி எனக்கு உயிரைப் புக டியது. இதுவும ஓர் அற்புதமே. என்றாலோ உரத்துக்கூவச சக்தியில்லை; ஆயினும இப்பொ ழுதிருக்கும எனதுற்சாகத்தில் இயன்றவளவும் குரலெடுத்துப்பாடுவேன். எனது சகோதரர் களும அணிமையிலே இருக்கிறார்கள் போலும்.

(குணமாலிகை பாடுகிறாள்.)

இராகம் - யமுனா கலியாணி - ஏகதாளம.

கண்ணிகள்.

இன்னுயிர்க்கிரங்குமன்னேயினபவொலியே !
உன்னைநம்பினேனுக்கருளொன்றுசொலியே !
என்னரியசோதரரைபெங்கேபொளித்தாய !
பன்னிப்பன்னிநானவருந்தப்பணணையளித்தாய் !
என்றனைவர்போனவழியியம்புவாய்நீயே !
உன்றனையேநம்பினேனுவந்தருள்வாயே !
கானே ! பென்றனகண்ணைப்பாரைக்காட்டிக்காராயோ !
வானேயூருந்தெய்வமேயென்வருத்தம்பாராயோ !
கானுறேயென தம்பிமாரைக்கண்ணிற்காட்டாயோ !
ஊனேவாடும்பேதையேனுக்குதவமாட்டாயோ !
என்முன்னேயோரொதிரொலியாயினிதேபண்செய்வாய்!
வன்மஞ்செய்யாயென்மைந்தரைமருவக்கண்செய்வாய் !

மோ:—(தனியே) ஆ! ஆ!! இப்புவியிடத்தும் மானிடர்கள் இவ்வளவு இன்பமாய் மனத்தை உருக்கும்படி பாடுவார்களோ! நிஜமாய் ஏதோ புனித விசேஷ மிவளிடத்திருந்து தனது இருக்கையை இக்கான ரூபமாய் வெளிப்படுத்துகின்றதுபோலும்! அது நிச்சப்தமான இவ்விருளில் எவ்வளவு இன்பமாயிருந்தது. இவள் பாடப்பாட இரவும் மனமகிழ்ந்து புன்னகை செய்ததே. என் தாய் வைரோசனியும், அவளுடன்கூட அப்ஸரஸுகளும் பூந்தோட்டங்களில் மலர்களைப் பறித்துக்கொண்டே கீதம் பாட யான் கேட்டிருக்கிறேன். அப்பொழுது அந்த உயிரைப் பரவசப்படுத்தி மெய் மயங்கச்செய்து ஆனந்தக்கடலில் ஆழ்த்தும். ஆனால் இதுவோ வெகு அமர்ந்த ரம்மியத்தையும் உணர்வோடு கூடிய பரமானந்தத்தையும் திண்ணமாய் அனுபவிக்கச் செய்கின்றது. பாற்கடலின் படுவிஷத்தோடு தோன்றிய அமிர்தமாயினும், அவ்விஷத்தின் சேர்க்கையால் ஒருகால் அதனை உண்டவனை வருத்த இடமுண்டு. இவளது கானமாகிய அமிர்த மென்றாலோ, அங்ஙனம் தோஷத்தின் சேர்க்கை சிறிது மின்றியும், என்னிடத்து வெப்பத்தை மிக மூட்டியதே! இதன் தன்மை யிருந்தவாறு என்னே!

"உண்ணாதே யுயிருண்ணா தொருநஞ்சு
சனகியெனும் பெருநஞ்சு என்னைக்
கண்ணாலே நோக்கவே போக்கியதேயுயிர்"

என்பதன் உண்மையையும் இவள் கண்ணன்றே, அறிந்தேன். நான் இவளோடுபேசி இவளை எனக்கு உரியளாக்கிக் கொள்வேன்.

(குணமாலிகையை நோக்கி) ஏ! அற்புத அணங்கே! நிச்சயமாய் நீ இவண் உறைபவளல்லை. ஒருவேளை நீ இந்த ஆரண்யத்துக் காரியான வனதேவதையோ? வனத்தில் மரங்கள் பட்டுப் போகாமல் தழைத்து ஓங்கும்வண்ணம் நீங்குரலெடுத்துப் பாடுகிறாயோ? உனது இசையைக் கேட்டு "மருண்டு மான் கணங்கள் மேய்கை மறந்து மேய்ந்த புல்லும் கடைவாய்வழி சோரும்-மரங்களினின்று மதுதாரைகள் பாயும், மலர்கள் வீழும், வளர் கொம்புகள் தாழும்", பட்ட மரங்கள் துளிர்க்குமே!

குண.—அந்தத் தோத்திரமிருக்கட்டும். மனது வேறு வழிப்பட்டிருக்குமவர்க்கு நீ படிக்கும் தோத்திரம் எப்பொழுதும் பாழன்றே! எனது சக்தியைக் காட்டும்பொருட்டுப் பாடியதன்று. எனது குரலைக்கேட்டு என்னைப் பிரிந்தவர்கள் அடையும் வண்ணம் செய்த உபாயமே.

மோ.—அஃது எப்படி நேர்ந்தது மாதே?

குண.—மையிருளினும் அடர்ந்த அடவியினும்

மோ.—அதனால், கூடநெருங்கி வருபவர்கள் எப்படிப் பிரிபடுவார்கள்?

குண.—நான் களைப்புற என்னை மரத்தடியில் விட்டுச் சென்றார்கள்.

மோ.—அப்படிச் செய்தது அவமதியினாலோ வஞ்சனையினாலோ, அல்லது வேறு காரணத்தாலோ?

குண.—அயலில் குளிர்ந்த நீர்தேட.

மோ.—வேறு துணையொன்றுமின்றியே உன்னைவிட்டுப் போனார்களா?

குண.—அவர்களும் இருவர்களே. சீக்கிரம் திரும்பி விடலாமென்று சென்றார்கள்.

மோ.—அதற்குள் இருள்வந்து சூழ்ந்துவிட்டதோ?

குண.—எனது துன்பநிலை எவ்வளவு எளிதில் அறியக்கூடியது பார்.

மோ.—இப்பொழுது வழிகாட்ட ஒருவருமில்லையே என்பது தவிர அவர்கள் பிரிவினால் வேறு வருத்தமுண்டோ?

குண.—எனது சகோதரர்களை இழக்கும் துக்கமே தவிர வேறின்று.

மோ.—அவர்கள் இளைய வாலிபர்களோ, முதிர்ந்த ஆண்பிள்ளைகளோ?

குண.—அவர்களுக்கு முகத்தில் இன்னம் மீசை முளைக்கவில்லையே.

மோ.-குடியானவர்கள் மாடுகளை உழவினின்றும் வீட டுக்கு ஓட்டிப்போகும் வேளையில் அத்தகைய இருவரைப்பார்த்தேன். அவர்கள் அந்தக் குன் றில் முதிர்ந்த பச்சைத் திராக்ஷப்பழக் குலை களைப் பறித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் இருந்தவாறு நோக்குங்கால் சாதாரண மனிதர் களாகத் தோற்றவில்லை? வானுலகில் வதியும் வானவர்கள்போல் விளங்கினார்கள். வானி லுலாவி வானவில்லின் வண்ணம்பூண்டு மேக மண்டலத்தில் விளையாடும் கந்தர்வர்கள் என் றெண்ணினேன். எனக்கு அவர்களிடத்துப் பயமும் மரியாதையும் தோன்ற அவர்களை நம ஸ்கரித்துச் சென்றேன். நீ தேடுவது அவர்க ளாயிருப்பின் மிகு சந்தோஷத்துடன் அவர்க ளிருக்குமிடத்தைக் காட்டுவேன். ஆனால் வழி யோ ;—

"பொருந்தார்கை வேலுதிபோற் பரற்பாய"வும்
"மெல்லடிக்கண் குருதிசோர"வும்
"விரும்பாத கா"னிலுள்ளது.

குண.—எவ்வழி அவர்களிருக்குமிடம் சீக்கிரம் சே ரும் ?

மோ—.அது இப் புதரினின்றும் நேர் மேற்கிலுள் ளது.

குண.—பிரகாசமற்ற நக்ஷத்திரங்களோடு கூடிய இவ் விருண்ட இரவில் அதை முன்பின் அறியாதவர் கள் கண்டு பிடிப்பது கடினமன்றோ ?

மோ.—நான் இக்கானில் ஒவ்வொரு பொந்தும், புதரும், குன்றும் குகையும், மூலேயும் முடுக்கும், ஆறும் காலும் செவ்வையாய் அறிவேன். உன்னைப்பிரிந்த உனது சகோதரர்கள் இன்னு மிக்காட்டிலிருப்பின் காலைக் கருக்கினுள் குயில்கள் கூவுமுன் யானறிவேன், அப்படி யில்லாவிடில் உன்னை அவர்கள் தேடி வருமளவோ, நான் அவர்களைத் தேடிப் பிடிக்குமளவோ, எனது சிறு குடிலில் பயமின்றித் தங்கியிருக்கலாம்.

குண.—ஏ மள்ளர்கோனே! உனது உபசாரத்துக்கு இணங்கி உன்னை நம்பி உன்னுடன் வருவேன். இம்மரியாதை, உயர்ந்த ஆஸ்தானங்களிற் பிறந்து, அங்ஙனே செய்தற்குரிய உபசாரமாயினும், அவ்விடத்துச் சிறிதும் காணப்பெருமல், நின்போன்ற எளியார் குடிசைகளில் மிகுதியும் எளிதில் வழங்குகின்றது. இஃதென்ன வியப்பு! நான் இப்பொழு திருப்பதினும் அபாயகரமான நிலே வேறுண்டோ? வேருெரு இடத்துக்குச் செல்ல ஐயங்கொள்ளவு மிடமுண்டோ?

(தனக்குள்) எம்பெருமானே! என்னை நீர் கடாக்ஷித்து எனது சக்திக்கு மேற்பட ஆபத்தை விளைவித்துச் சோதிக்காமலிருப்பீராக.

(அவனை நோக்கி) உழுநர் கொழுந்தே வழி காட்டு.

(மோகனனைத் தொடர்ந்து செல்லுகிருள்.)

இடம்:—காட்டின் மற்றொருபுறம்.

காலம்:—இரவு இரண்டாம் யாமம்.

(சகோதரர்களிருவரும் வர)

தேவப்பிரியன்.—ஏ ஒளிர்ந்திருக்கும் நக்ஷத்திரங்காள்! வெளியே வாரீரோ; ஓ சந்திரனே! பிரயாணிகள் தோழனே! முகிலினின்று வெளிவந்து இவ்வாரிருளை நீக்காயோ! அல்லது சிறுகுடிசைப் பொந்தினின்றும் சிறு விளக்காயினும் எங்கள் பக்கல் ஒளியைச் செலுத்தாதோ? அவ்விளக்கையே துருவனாக மதித்துச்சென்று வழி யறிவோமே!

பாலசுந்தரன்.—இவ்வித அதிட்டம் எங்கள் கண்ணுக்கு வாய்க்காவிடினும் காதிலாவது ஏதேனும் ஒரு சத்தம் கேளாதோ! ஆட்டுமாட்டுக் கொட்டினின்றேனுமொருசத்தங்காதிற்படாதோ! இடையர்குழலூதுங்கானமோ, யாமத்துக்கூவும்சேவற்கூவலோ செவியில் வீழாதோ! விழுந்தால் இவ்விருண்ட அடர்ந்தகானில சிறிது ஆறுதலாயிருக்குமே; மனதைக்குளிர்ப்பிக்குமே. ஐயோ! அந்தத் துர்ப்பாக்கிய மடந்தை நமது சகோதரி எங்கே அலைகிறாளோ! சிலுசிலுத்த பனியினின்றும் எங்கேயொதுங்குவாளோ; குளிரிலடிபட்டு எக்கரையில் உறங்குகின்றாளோ; அல்லது முள் அடர்ந்த மரத்தின்மீது துன்பங்கொண்டு பயந்து சார்ந்துகொண்டிருக்கிறாளோ;

அல்லது இவ்வாறு நாம் பேசும் போதே கொடிய மிருகங்களின் பசிக்கு இரையாகிருளோ; அன்றி எவனுயினும் ஒரு கொடியனது காமத்தீயிலகப்பட்டு வருந்துகின்றளோ.

தேவ.—தம்பி, அப்படியெல்லாம்பேசாதே; இன்னும் பின்வரக்கூடிய துன்பங்களைப்பற்றி வீணில் முன்னே உன்னி உறங்காதே. அப்படித் தீங்கு நேரிடுவதாகவே யிருந்தாலும், தெரியாமலிருக்குமளவும் ஒருவன் தான் விலக்க விரும்பும் துன்பங்களை ஏன் எதிர்கொண்டு அழைக்கவேண்டும்? ஏன் வீணுக எண்ணுத எண்ணங்களையெல்லாம் எண்ணி எண்ணி வருந்துகின்றுய்? அப்படியன்றி நீ எண்ணியது பொய்யாகில் மிகவும் கொடிய ஆத்மவஞ்சனைக் குள்ளாவாயன்றே? இந்த இருளும் ஏகாந்தமும், ஒன்றியாயிருக்கின்ற நமது சகோதரியின் மனதைக் கலக்குமென்றே எண்ணுகின்றுய்? அவளோ மனத்தூய்மையுடையாள்; கற்பினுக்கு ஒரு வித்துப்போன்றவள். இத்தகைமையர்கள் தீங்குற்றுழியும் நீதிநெறி தவருது ஒழுகி உள்ளம் நிறைந்துள்ள ஒளிமிகுதியினுல் எல்லா மறிந்து நடந்துகொள்வார்கள். அவர்களுக்குச் சூரியனும் சந்திரனும் அவசியமில்லை. ஞானிகள் உலக வாழ்க்கையின் தொல்லையில் மூழ்கி மழுங்கியிருக்கும் ஞானத்தை, ஏகாந்தத்திலிருந்து தியானம்செய்து ஓங்கச்செய்கிருர்களன்றே அவர்களுக்கு இருண்டபாதல உலகும், நடுநிசி

யில், பட்டப் பகல்போல் விளங்கும். அவர்களுக்கு ஊனக்கண்ணினும் ஞானக்கண்ணே உயர்ந்தது. அவர்கள் முக்தியாகிய பெரும் பயனை அடைதற் பொருட்டு நெஞ்சமென்னும் துணைவனை நேசம்பூண்டு வேறுதுணையின்றி உலகப்பற்றினை அறுத்து ஆத்ம விசாரணைசெய்து மெய்ம்மையாகிய விளக்கேற்றிப் பொய்ம்மையாகிய இருளைப்போக்கிப் பரம்பொருளைக் காண்கிறார்களன்றோ? அஃதன்றி, துச்சிந்தையையே மேற்கொண்டு பாபச் செயல்களையே புரியும் பாபிகளுக்கு உச்சிக்காலச் சூரியனிருப்பினும் எவ்வுலகும் இருண்டதே. “எல்லாப் பிராணிகளுக்கும் எது இரவாயிருக்கின்றதோ அதில் புலன்களையடக்கிய யோகியானவன் விழித்திருப்பான். எதில் பிராணிகளெல்லாம் விழித்திருக்குமோ அது ஞானக்கண்ணுடைய முனிவனுக்கு இரவாய் விளங்குகின்றது” என்று கீதையில் ஸ்ரீ கிருஷ்ண பகவானும் கூறுகின்றார்.

ால.—மெய்யே. யோகிகள் மலைகளிற் குகைகளினும், வனங்களிற் பன்னசாலையினும் அச்சமற்று இன்புறத் தவம்புரிகிறார்களே! ஆனால் ஒரு ஸந்நியாசியின் காவி வஸ்திரங்களையாவது புத்தகங்களையாவது ஜபமாலைகளையாவது கமண்டலத்தையாவது யார் கவர்ந்துபோவார்கள். ஆயின் எழிலுமிளமையுமோ நவரத்னப் பழக்குலைகள்

தொங்கப்பெற்ற கற்பகத் தருப்போலுமன்றோ! அவற்றைத் துராசையினின்றும் காக்கக் கண் கொட்டாமல் எப்பொழுதும் விழித்துள்ள இரண்டாயிரம் கண்படைத்த பன்னக வேந்தனன்றோ வேண்டும்! நீ பாலைக்காய்ச்சிப் பூனையைக் காவல்வைக்கலாமென்கிறாயே! இவ்வடர்ந்த காட்டில் இவ்விருண்ட விரவில் ஒன்றியாய் ஓரிளம்பெண்ணும் அகப்பட்ட சமயமுமவாய்த்தால் அதனை எவராகிலும் கைசோர விடுவார்களோ? இருளினாலும் தனிமையினாலும் எனக்குக் கவலை கிடையாது, அவைகளாற் தொடரும் தீமைகளை யோசிக்க என்து உடல் நடுங்குகின்றது. நமது கன்னியாகிய சகோதரியை எப்பாதகன் தொடரப்பாரோ வென்று என் மனம் பதைபதைக்கின்றது.

தேவ.—தம்பி! நமது சகோதரிநிலை, பயமும் அபாயமும் முழுதும் அற்றதென்று பேசவில்லை. ஆனாலும் நன்மை தீமையிரண்டிற்கும் சமமாக இடமிருப்பின் பயத்தையும் சந்தேகத்தையுமொழித்து நன்மையைச் சார்வது என்து சுபாவம்; நீ எண்ணுமாறு நமது சகோதரி ரக்ஷணையற்றவளல்லள்; அவளிடத்து ஓர் வலிய சக்தி மறைந்துள்ளது என்பதை நீ மறந்தாய்.

பால.—எம்பெருமான் பலமென்று நீ நினைத்திருந்தாலொழிய வேறென்ன? 'அவனன்றி ஓரணுவும் அசையாது கண்டாய்'.

தேவ.—அதுவேயுமன்றி, கடவுள் அளித்திருப்பினும், அவளதாகவே கூறும்படியான வேறுமொன்று முள்ளது: அஃதாவது: கற்பின் வலியே.

"சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை."

என்பது பொய்யாமொழியன்றோ!

"ஏலாத இடுக்கணிலும்
மேலான குணத்தினள்தன்
தோலாத ஆரணவாள்."

என்றபடி கற்புள்ள ஸ்திரீ ஆயுதபாணிக்கும் மேலன்றோ? அவள், புலி கரடி. துஷ்டர்கள் நிறைந்துள்ள கொடிய காடுகளிலும் மலைகளிலும் பயமின்றி யுலாவும் சக்தியுடையாள். அவளைக் காட்டு முரடனோ, குறவனோ, வேடனோ, கற்பைச்சிதைக்க அணுக வியலாது. அப்படிப் பலாத்காரமாய் அணுகுபவர்களைக் கற்பின் கிரணங்கள் நசித்துவிடுமே! துன்மார்க்கனாகிய,

"வேடனைப்ப விழிபதைத்து வெய்துயிரா
ஆடன் மயில்போ லலமரா—ஓடிய" தமயந்தி,
"சீறா விழித்தாள் சிலைவேட னவ்வளவில்
நீறாய் விழுந்தா னிலத்து" என்பதறியாயோ?

கற்பாகிய கவசம் தாங்கியுள்ளவர்களைப் பேய் பிசாசுகள் அண்டாவாம். 'தயாவதி' (Diana) என்பாள் கற்பின் சக்தியாலன்றோ கரடிகளையும் புலிகளையும் அடக்கி ஆள்கின்றாள்! அச்சக்தியாலன்றோ, தான் நீராடுவதைக் கண்ணுற்

யிருந்த ஆண்மகனை மானாக மாற்றினாள்! அநஸூயை திரிமூர்த்திகளையும் குழந்தைகளாக்கித் தாலாட்டியதும் அதனாலேயன்றோ! கல்லைக் கடலையாகச் சமைத்ததும் அதனாலே யன்றோ! ராஜ சபையில் மானம் போகாவண்ணம் திரௌபதியைக் காத்ததும் அக்கற்பேயன்றோ! சாவித்திரி தனது கணவன் சத்தியவானை உயிர்ப்பித்ததும் அக் கற்பின் உதவியாலன்றோ! நளாயினி பொழுது விடியாமற்செய்ததும் அதனாலேயன்றோ! கண்ணகி யென்பாள் தன் கணவன் கோவலனை வீணே கொன்ற பாண்டியனது நாட்டைக் கொளுத்தியதும் கற்பாகிய நெருப்பாலன்றோ! பின்பு அவளை பத்தினிக் கடவுளாகக் கொண்டாடப்படுவதும் அதன் மகிமையாலன்றோ! சந்திரமதியின் கழுத்தில வாள மாலையாக விழுந்ததும் அக்கற்பின் மகிமையே. ஆதிரை யென்பாள் தன் கணவன் சாதுவன்றானுஞ் சாவுற்றானெனக்கேட்டு அழல் ஈமம் புகுழி,

"உடுத்த கூறையும் ஒள்ளொளி அறாஅ
தாடிய சாந்தமும் அசைந்த கூந்தலிற்
சூடிய மாலையுந் தொன்னிறம் வழாது'
'திருவின் செய்யாள்" போல் இனிதிருந்ததும்,

மதுரையில் கொடிமடை வீதியின் வருபவளாகிய) விசாகை தன் கழுத்தில்,

"தொல்லோர் கூறிய மணமீ தாமென
எல்லவிழ் தாரோன் இடுவான் வேண்டி

மாலைவாங்க வறியசெங்கை நீலக்குஞ்சி
நீங்காதாகியதும்" இக்கற்பின் செயலன்றோ !

இன்னும் விரித்துக்கூறுவதென்? சீதைப் பிராட்டி தீயினில் இறங்க, அது குளிர்ந்திருந்ததும் இக்கற்பின் மகிமையேயன்றோ !

தேவர்களுக்குக் கற்பினிடத்துள்ள அபிமானம் அளவிறந்தது என்பதை இவை விளக்குகின்றனவன்றோ? இவ்விதக் கற்பமைந்தமாதை வானவர்கள் ஆயிரக்கணக்காய்ச் சூழ்ந்து பாபங்களையும் தீமைகளையும் அவமானங்களையும் நெருங்கவொட்டாமல் அகற்றிப் பரிசுத்தமான அதிமானுஷ தத்துவங்களையே காதிற்புகட்டி நாளடைவில் ஆத்மஞானம் ஊட்டித் தங்கள் சேர்க்கையால் லபிக்கும் ஓர் ஒளியைக்கொண்டு அசேதனசரீரத்தையும் சைதந்யமயமான உயிருக்குத் தக்க ஆலயமாகச்செய்வதுடன் உயிரையும்உடம்பையும் ஒரு தன்மைப்படுத்தி அவைகட்கு உண்மையிலுரியதாய, யாவர்க்கு மெய்தற்கரிய, சாக்காடில்லாத் தன்மையைத் தருவார்களன்றோ? ஆனால் காமம் தனக்கனுகுணமான, திருஷ்டி, சேஷ்டை, வாக்கு விகாரங்களினாலும், தடையின்றிச் செய்யும் ஈனமான கிருத்யங்களினாலும் அழுக்கை உள்ளே செலுத்தி, அவற்றின் கலவியினால் ஆன்மாவை மலினமாக்கி, சரீரத்துளடக்கி, மிருகத்தன்மையைக் கொடுத்து, அதற்கு ஆதிநிலையிலிருந்த திவ்யஸ்வரூபத்தை முழுதும்

இழக்கச்செய்து, அசாபந்தங்கள் அதிகரிக்கக் கர்மபாசத்திற் பிணித்துத் துர்மரணமடையச்செய்துபேயும் பிசாசுமாய் உலகில் திரியச்செய்கின்றது. இதை விளக்கும்படி மணிமேகலை, உதயகுமரன் சரிதங் கூறுவேன்

மணிமேகலை யென்பாள் மலர்வனம் புகுந்து வதியுங்காலத்து உதயகுமரன் என்னு மிளவரசன்,

"மீயா னடுங்க நடுவிகின் றுரங்கிய
கூம்பு முதன்முறிய வீங்கு பிணியவிழ்ந்து
கயிறு கால்பரிய வயிறு பாழ்பட்டாங்
கிதைசிதைந் தார்ப்பத் திரைபொரு முந்நீர்
இயங்குதிசை யறியாது யாங்கணு மோடி
மயங்குகா லெடுத்த வங்கம் போல"க்

காமமாகிய களிற்றின் வசப்பட்டுச் செய்வன தவிர்வன அறியானாய்த் தன்னைத் தொடர்ந்து அவ்வனம் வந்தமை அறிந்து, தனக்கும் ஊழின் வாதனைபற்றி அவனிடத்துக் காதல் தோன்றியவிடத்தும், கற்பின்பக்கல் சழிபெரும் கருத்துள்ளளாய்,

"புதுவோன் பின்னைப் போனதென் னெஞ்சம்
இதுவோ வன்னாய் காமத் தியற்கை
இதுவே யாயின் கெடுக வதன்றிறம்"

என்று மனதைத் திடப்படுத்தி அவன் கண்ணிற்படாமல் ஒளிந்தனள். அக்கருத்துக்கிசைந்து அவனை நல்வழியிலேயே உய்க்கக்கருதிய மணிமேகலா தெய்வம்,

"ஆங்கவ னன்றியும் அவன்பாலுள்ள
நீங்காத் தன்மை நினக்கு முண்டு"

என்று கூறி மணி பல்லவம், என்னும் தீவில அவளை உய்த்துச்சென்றது. அவள் அவண் வழி திகைத்து மயங்குகையில் புத்த பீடத்தைக் கண்ணுற்று அதை வலமவந்து நமஸ்கரித்துத் தனது முற்பிறப்பின் வரலாற்றை அறிந்துகொண்டு பின்னும் தோன்றிய மணிமேகலா தெய்வத்தினிடம் பலநிருகளுக்கும் விலக்காகும் பல மந்திரங்கள் உபதேசமும் பெற்று ஓர் அறவம்பலத்துட் சென்றிருந்தனள். இவ்வாறிருக்க உதயகுமரன்,

"இடங்கழி காமமோட் டடங்கா னாகி,
உடம்போ டென்றன் னுள்ளகம் புகுந்தென்
னெஞ்சங் கவர்ந்த வஞ்சக் கள்வி" என்று,

மணிமேகலையின் கற்பைச் சிதைக்கக்கருதி அவ்வம்பலம் நள்ளிரவேபுக, ஆங்ஙனம் ஒருவன் கைவாளினால் வெட்டுண்டு துர்மரணமடைந்தான். உதயகுமரன் மாளவும், மணிமேகலை சிறைப்பட்டுத்தெய்வ அருளால் சிறையின் நீங்கி உதயகுமரன் தாயாகிய இராசமாதேவியின் வஞ்சனைகளைக் கடந்து ஆத்தும விசாரணைசெய்து தத்துவஞானம் எய்தினள். இவ்வுதய குமரன் போன்றவர்கள் தாம், இறந்தபிறகு பரலோகமடையாது தாம் மிகவும் நேசித்த உடலை விட்டுப்பிரிய முடியாது அதைப் புதைத்திருக்கும் புதிய சவக்குழியருகே பேயும் பிசாசுமாய் மயங்கித்தயங்கித் தங்கள் களேபரத்திடத்துள்ள

மோகத்தால் தாங்களே நீச நிலையையடைந்து வருந்தி யுழல்கின்றார்கள்.

பால.—வேதாந்த தத்துவவிசாரம் எவ்வளவு மனோகரமானது. அஞ்ஞானிகளுக்குத் தோன்றுமாறு, அது கடினமாயும், தடுமாறச்செய்வதாயுமில்லை. அது, மதுரமான மகதி கானத்தினும் இனியது; சிறந்த தெவிட்டாத் தெள்ளமுது போன்றது.

தேவ.—நில்லு தம்பி, ஏதோ சத்தம் தூரத்தினின்று காதில் விழுகிறது. சற்று உற்றுக்கேட்போம்.

பால.—அப்படித்தான்போலும் அண்ணா! அஃது யாதாயிருக்குமோ?

தேவ.—நம்மைப் போன்றிவ் விரவிற் சிக்கியவர்கள் சத்தமோ? அன்றி, எவனேனும் ஒரு வேடன் சத்தமோ? அல்லது ஒரு சோரன் தனது தோழர்களை அழைக்கும் சத்தமோ?

பால.—என் சகோதரியை சுவாமி ரக்ஷிக்க. சப்தம் மறுபடி கேட்கிறது; கிட்ட நெருங்குகிறது; நாம் கையுஞ் சத்தியுமாய் எச்சரிக்கையா யிருப்போம்.

தேவ.—நானும் கூவி வினவுகின்றேன். வருபவன் சிநேகிதனாகின் நல்ல சமயத்தில் வருகிறான். இல்லாவிடின் நாம் நம்மைக் காத்துக்கொள்ள முயலுவது நியாயமே. ஆயினும் எள்ளினுள் எண்ணெய்போல் எங்குமுள்ளொருவனான எம்பெருமான் நம்மைக்காப்பானாக.

காலம்:—மூன்றாம் யாமம்.

தேவபுருஷன் கண்ணனென்னும் ஆயன்வேடம் பூண்டுவர—

தேவ.—நீயார்? எட்டி நில்லு; கிட்ட நெருங்காதே; நெருங்குவாயாகிற் படாதபாடுபடுவாய்.

கண்.—அது யார் குரல்? எனது பிரபுவின் குரலா? இன்னும் பேசுமையா, குரலைக் கேட்போம்.

பால.—அண்ணா! இவன் நமது வீட்டிடையன் கண்ணன்போலும்.

தேவ.—ஆ இனிய குழலூதும் கண்ணா! உனது கானத்தைக் கேட்டு ஆனந்தத்தின்மிகுதியால் தலையசைக்க ஆயிரந்தலை ஆதிசேடனும் வல்லனல்லன்! அதைக் கரதாளத்தால் தெரிவிக்க வாணனும் வல்லனாகானே! உனது கானத்தைக் கேட்டுத் தும்புரு நாரதரும் வானுலகில் ஒளிந்தனரன்றோ! நீ இவ்வளவு தூரம் எவருமறியாத இம்மூடுக்குக்கு இவ்விருளில் எங்ஙனம் வந்தாய்? ஏதாவது கன்றுகாலி மந்தையினின்றும் ஓடிவிட்டதோ? அதைத் தேடி வந்தாயோ?

கண்.—எனது பிரபுவே! எனது பிரியமான யஜமானனது சிமந்த புத்திரரே! நான் வந்த காரியம் அவ்வளவு அற்பமானதன்று. நான், ஓடினமாட்டையும் ஓநாய் கொண்டுபோன ஆட்டையும் தேடிப்பிடிக்க வரவில்லை. இவ்விடத்து மேயும் ஆட்டுமந்தைகளெல்லாம் இப்பொழுது இருக்கும் என் விசாரத்துக்கு இலக்கல்ல. தங்கள்

கன்னி சகோதரி எங்கே? அவளென் உங்களுட
னில்லை ?

தேவ.—நாங்கள் வழியிலே அவளை விட்டுப்பிரிந்து
துன்புற்றிருக்கின்றோம். ஆனால் அது எங்கள்
குற்றத்தாலன்று.

கண்.—ஐயோ! நான் அஞ்சியது மெய்தான்போலும்.

தேவ.—நீ அஞ்சியது யாது கண்ணா? சுருக்கிச்
சொல்.

கண்.—சொல்லுகின்றேன் கேளுமையா. நமது புரா
ணகதைகளில் பேய், பிசாசுகள், மாந்திரிகர்கள்
உண்டென்று சொல்லப்பட்டிருப்பது மூடர்
கள் பொய்யென்றெண்ணினும் மெய்யே. இவ்
வடவியின் மத்தியில் இருண்ட ஒருபெரிய ஆல
விருட்சத்தினடியில், துர்மந்திரங்களில் மிகவும்
தேர்ந்துள்ள, மதிரனுக்கும் சூரன் மகளுக்கும்
பிறந்து மோகனன் என்னும் பெயர்பெற்றுள்ள,
சூனியக்காரன் இருக்கின்றான். இவ்வழியில்
தாகத்தா லடிபட்டுச் செல்லும் பிரயாணி
களை மந்திரித்த நீரை அருந்தச்செய்து, ஒளி
திகழும் முகத்தைக் கொடிய இழிய மிருக ரூப
மாக மாற்றிவிடுகிறான். இவ்வனத்தில நான்
மாடு மேய்த்துக்கொண்டிருக்கையில் இச்செ
ய்தி என்காதில் விழுந்தது. இவ்விடத்தில் அவ
னும் அவன் மிருகங்கள் போன்ற பரிவாரமும்
இரவுகள்தோறும் துர்நீதி யென்னும் துஷ்ட
தேவதையை அருச்சித்து அநேக துஷ்க் கிருத்

தியங்களால் கொண்டாடுவதுடன், இவ்வழிச் செல்லும் பேதைப்பிரயாணிகளை மயக்கி வலைக்குள் சிக்கச்செய்யப் பலதந்திரங்கள் புரிவார்கள். இன்றுமாலை மாடுகளை மேய்ச்சற்றரையினின்றும் ஓட்டிப்போய்த்தொழுவத்திலடைத்த பிறகு நான் ஓரமுகிய நதிக்கரையில் உட்கார்ந்து கானஞ்செய்து மெய் மயங்கி ஆனந்தித் திருக்கையில் கொட்டின் முழக்கம் கிளம்பியது. நான் என் கானத்தை நிறுத்திச் சற்று உற்றுக்கேட்டேன்; அது திடீரென்று ஓய்ந்தது; நித்திரை மூட்டி அதை வளரச்செய்வதற்கேற்ற நிசப்தம் உண்டாயிற்று. உடனே திவ்யமங்களகரமாய்ப் பரமானந்தத்தை விளைக்கும் ஓரினிய இசை தோன்றியது. அதைக்கேட்ட அசேதனமான ஏகாந்தமும் தனது இயல்பை மாற்றி எப்பொழுதும் தான் இவ்வாறு கானமயமாயிருந்து ஆனந்திக்க விரும்பியதுபோலும். அஃது இறந்தவர்களையும் உயிர்ப்பிக்கும் திறமுடையதாகும். அதனால் மெய்மறந்த யான் சற்று மயக்கந் தீர்ந்து உற்றுக்கேட்கவும் எனது ஆண்டவனது கண்மணி குணமாலிகையின் குரல்போல் இருந்தது. உடனே பயமும் வருத்தமும் மேற்பட்டு 'ஏ இளங்குயிலே! எவ்வளவு இன்பமாய்ப் பாடுகிருய், சீக்கிரம் வலைக்குள் சிக்கிக்கொள்வாயே'! என்று பரிதபித்து தலைதடுமாற்றமாய் அவளிருக்கு மிடம் ஓடிப்போய்ப் பார்த்தேன். நான் அவ்விடம் சேரு முன்னமே

அவள் அம்மாயன் வலையுட் சிக்கி அவனை அடுத்த கிராமத்தானென்றெண்ணி, 'இவ்வழி இருவர் சென்றதைக் கண்டாயோ?' என்று கேட்டுக் கொண்டிருந்தனள். உடனே நான் உங்களைப் பற்றித்தான் கேட்டாளென்று ஊகித்து அவ்விடத்து ஒரு கணப்பொழுதும் நில்லாமல் உங்களைத்தேடி ஓடி வந்தேன். அப்புறம் யாது நிகழ்ந்ததோ அறியேன்.

பால.—இருளும் நிழலும் நரகமும் ஒன்று கூடினுற்பொத்த இந்த மையிருளடவியில் தனிமையாயுள்ள ஒரு பேதைப்பெண்ணை இவ்வாறு சோதிக்கலாமோ எம்பெருமானே! அண்ணா நீ நம்பிக்கை மூட்டிச் சொன்னவெல்லாம் என்ன பயன் பார்?

தேவ.—அப்படியல்ல தம்பி, நான் சொன்னவெல்லாம் மெய்யே. அவற்றி லொருமொழியேனும் இப்பொழுது மறுத்துச்சொல்லேன். மந்திரமோ மாயையோ வஞ்சனையோ சன்மார்க்கர்களை அதட்டிப் பயமுறுத்துமே யொழியக் கொடிய தீங்கு பயக்காது; திடுக்கிடச் செய்யுமே யொழிய அடிமையாக்க இயலாது. சன்மார்க்கர்களுக்குத் தீமைசெய்யத் தொடங்குவ வெல்லாம் அவர்களுக்குக் கடையில் நன்மையாகவே முடிந்து கீர்த்திக்கிடமாகும். துஷ்டர்கள் சிஷ்டர்களை நெருங்கவொண்ணாது தாங்கள் இழைக்க

நினைக்கும் துன்பவழி தங்களுக்கே துன்ப மிழைக்க நாசமுறுவார்கள்.

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்."

என்றார் பொய்யாமொழியாரும்.

நான்சொல்வியது பொய்யாகில் வானம் இடிந்துநம் தலையில் விழாதோ? உலகமெழுடியற்றுப் போய்விடாதோ? வா நாம் போவோம். தெய்வ சங்கல்பத்துக்கு விரோதமாக நாம் நடக்காம லிருப்போமாக. நரகத்துள்ள கோர ரூபமான யமபடர்கள் கோடிக் கணக்காய் அக்கெட்ட பாதகனுக் குதவிபுரிய அவனைச் சூழ்ந்திருப்பினும் அவனை யறிந்து அவன் வலையினின்றும் என் சகோதரியை விடுவித்து அவனையும் மானம் போகும்வண்ணம் மயிரைப் பிடித்திழுத்து அவனது நீய வாழ்க்கைக்கொத்த துர் மரண மடையச்செய்து யமலோகமனுப்புவேன்.

கண்.—ஏ! இளங்கன்றே! உமது அஞ்சாத் தீரத்தை யும் மிகுத்த தோள்வலியையும் யான் மிக மெச்சுகின்றேன். இப்பாதகனைக் கத்திமுதலியன சிறிதும் வருத்தா. அவைகள் வீணே. அவன் தன் மாயாதண்டத்தை அசக்கித் தனது மந்திரபலத்தால் உமது உடம்பை அக்கக்காய்ப்பிரித்து நரம்புகளைப் பொடிப்பொடியாக்கி விடுவான். அவனை வெல்ல வேறு ஆயுதங்கள் வேண்டும்.

தேவ.—அப்படியாகில் நீ இவ்வளவெல்லா மறிந்து கூற எப்படி அவனை நெருங்கினாய்?

கண்.—எனது யஜமானியை எப்படித் தப்புவிக்கலாமென்று ஆவல் கொண்டு வியாகுல மடைந்திருக்குங் கால் எனது சிநேகனொருவன் கொடுத்த வேர் ஞாபகத்தில்வந்தது. அவன் பார்வைக்கு மிக அற்பனாயிருப்பினும் மருந்து மாயங்களுக்குரிய பச்சிலைகளிலும் மூலிகைகளிலும் மிகத் தேர்ந்தவன். அவனுக்கு என்னிடத்துப் பற்றுண்டு; அடிக்கடி பாடச்சொல்லி மகிழ்ச்சியுடன் கேட்டிருந்து வெகு ஆனந்தத்தை அனுபவிப்பான்; பிறகு அதற்குக் கைம்மாறாகத் தனது தோற்பையைத்திறந்துபல்வகைப்பச்சிலைகளையும் மூலிகைகளையுங் காட்டி அதன் அற்புத சக்திகளையும் கூறுவான். ஒரு நாள் மிகவும் அவலக்ஷணமான ஒரு வேரைக்காட்டி, 'இதையும் இதன் பிரயோசனத்தையும் எவருமறியார். இதைத்தரும் செடி கறுப்பும் முள்முள்ளாயுமுள்ள இலையொடும் பொற்காந்தியுள்ள அழகிய பூவொடுங்கூடி வேறு தேசத்தில் உற்பத்தியாகின்றது. ஆங்கண், இடையர்கள் அதன் மேன்மையறியாது அதைத் தினந்தோறும் காலால் மிதித்துச் செல்லுகிறார்கள். இஃது அநுமான்கொணர்ந்த அமிர்த சஞ்சீவியினும் அற்புத சக்தியுடையது. இதைக்கண்ட மாத்திரத்தில் பேய், பிசாசு, மந்திரம், சூனியம், விஷப்

பனி இலைகள் விலகிவிடும். இதன்பெயர் 'மாயா வைரி' என்று சொல்லி அக்கிழங்கிற் சிறிதளவு என்னிடத்துக் கொடுத்தான். இதுவரை அதை உபயோகிக்க அமயம்வாய்க்காதாக அதை மதிக்காமல் பையில் ஓர் புறம் போட்டிருந்தேன். இப்பொழுது இந்த ஆபத்தில் மனதுக்குவர, அதை உபயோகித்து அதற்கு அவன் கூறிய சக்தி உண்மையாய் உள்ளது என்றறிந்தேன். அதனாலேயே மந்திரவாதி மறைந்திருந்தும் அவனிருக்குமிடம் நானறிந்து அவன் மாயவலையின் உட்புகுந்து நீங்கின்றி வெளியே வந்தேன். நீங்களும் அந்த மூலிகையை வைத்துக்கொண்டு அம்மாந்திரிகன் மேல் பயமின்றிக் கட்கத்தை உருவிச்சென்று ஸ்படிக பாத்திரத்தை உடைத்து நீரைச்சிதறவடித்து மாயாதண்டத்தையும் பறித்துக்கொள்ளுங்கள். அவனும் அவன் பரிவாரங்களும் சண்டைக்குவர வெகு ஆடம்பரத்துடன் யத்தனித்துப் பயமுறுத்தினாலும் அவன் பின்வாங்க அவர்களும் ஓடி விடுவார்கள்.

தேவ.—கண்ணே, சீக்கிரம் அவ்விடத்துக்கு அழைத்துப்போ; துரிதமாய் நட; எங்கள் குலதெய்வம் எங்களை ஆதரிக்க.

"உன்னை நம்பினேனே னுனக்கே சரணம்
யென்னை யாதரிக்க நீதுவே தருணம்," (என்று கடவுளை வேண்டிக்கொண்டே செல்கிறார்கள்.)

இடம்.—காட்டின் வேறொருபுறம்.

காலம்.—நான்காம் யாமம்.

அவ்விடத்தில் சகலவித ஸாம்ராஜ்யங்களும் பொருந்திய ஒரு மாளிகையில் மோகனனும் அவன் கூட்டமும் வீற்றிருக்கின்றனர். குணமாலிகை மந்திரத்தால் ஒரு நாற்காலியில் கட்டுண்டிருக்க, மோகனன் ஸ்படிக பாத்திரத்தைக் கொடுத்துக் குடிக்கச்சொல்ல அதைப் பக்கத்தில் வைத்து எழுந்திருக்க முயலுகின்றாள்.

மோ.—ஏ மாதே! உட்கார். என் மாத்திரைக்கோலை அசக்கின மாத்திரம் அகல்யைபோல் நீ கல்லாய்ச் சமைந்துவிடுவாய்; அல்லது நளகூபர மணிக்கிரீவர்கள்போல் மரமாய் மாறிவிடுவாய்.

குண.—ஏ பித்தனே, பேதையே! பெருமை பேச வேண்டாம். தேவாதி தேவன் விதித்திருக்குமளவும் உன் மந்திரத்தால் இந்த ஸ்தூலசரீரத்தைக் கட்டலாமே யொழிய என் மனதைக் கட்ட முடியாது.......(என்று படபடத்துச் சினந்துக்கூற.

மோ.—மாதே, ஏன் இவ்வளவு படபடப்பு. இவ்விடத்தில் கோபம் என்பதே வாராதே. வருத்தம் இவ்விடத்தை எட்டியும் பாராதே. இரத்த புஷ்டியுள்ள மானுடர்கள் மனதில் கொழுத்த யௌவன பருவத்தில் விரும்பும் எவ்வித மனோரதங்களும் இவ்விடத்தே நிரம்பியுள்ளனபார். ஸ்படிக பாத்திரத்தில் ஜ்வலிக்கும் வாசனை மிகுந்துள்ள மதுவைக்குடி. அது தாகத்தை ஒடுக்கி மனத்தில் மிகுந்த உற்சாகத்தை விளைக்கும். காம

ன் இன்ப விருப்பைமூட்டத் தன் குழுவினர்க்குத் தானேஊட்டும் மதுவினும் அதிக மகிமையுள்ளது; இந்திரனுக்குச் சோமபானத்தாலுண்டாகும் உற்சாகமும் இது தரும் உற்சாகத்துக்கு ஒப்பாகாது. அப்படியிருக்க நீ ஏன் வீணாய் உடலை வருத்துகின்றாய். இது மின்னலைப்போலத் தோன்றிய வக்கணமே அழியும் தன்மைத்து என்று மூடர்களுடனே எண்ணி உடலை வெறுத்தாய் போலும். அஃதன்று மாதே. உயிர் உள்ளளவும் குடித்துக் களித்து இன்பங்களை நுகர்ந்து உனது மெல்லிய அவயவங்கள் குலுங்காமலும் நலுங்காமலும் இருக்க வன்றோ, சுவாமி உன்னைப் படைத்திருக்கிறார்! நீ அதை அறியாது அவரெண்ணத்தை அவமதித்து 'வேலைக்குப்பின் ஓய்வும், துக்கத்துக்குப்பின் சுகமும் வேண்டும்' என்னும் நியமத்தை மறந்து நீ ஜன்மமெடுத்ததை விபலமாக்கி இப்பொழுதடைந்திருக்கும் களைப்பைத் தீர்த்துக்கொள்ளே னென்கிறாயே? பேரெழில் மாதே! இதைக் குடித்தால் களைப்பு நீங்கி ஊக்கம் விளைந்து எல்லாச் சுகமும் உண்டாகும்.

துணை.—ஏ வஞ்சக ! அஃது உன்னிடம் குடிகொண்டுள்ள பொய்யையும் சூதையும் போக்கி உண்மையையும் நன்மையையுங்கூடப் பயக்குமோ? நீ சொன்ன நிரபாயமானகுடில் இதுவேயோ? இந்தக் கோரரூபிகள்யார்? இந்த அவலட்சண

முகங்கள் என்ன ? ஏ மாயாவி! உன்னை நம்பிய ஏழைப்பெண்ணை இவ்வாறே பொய்சொல்லி வஞ்சிப்பாய். இஃதன்றியும், இன்னும் மயக்கும் பானத்தையும் உண்பித்து என்னை மிருகமாகவும் மாற்ற யத்தனிப்பாயோ? கடவுள் என்மேல் கருணைகூர்க! நீ தரும் பானம் தேவேந்திரன் மனைவி களித்துண்ணு மமுதாயினும், அதை யான் உன்கையில் வாங்கி அருந்தேன். நல்லவர்களன்றிப் பிறர் நல்ல வஸ்துக்களை நுகரார்களோ? நல்லதல்லாதது நல்லவர்களுக்கு ருசியாதே! துஷ்டான்ன பானங்களைப் புசித்தோ, குடித்தோ, உண்டாகும் ஸந்துஷ்டியைப் பரிசுத்தர்கள் பெரிதாக மதியார்கள்.

மோ.—உபவாஸமிருந்து உடலை வருத்துவது நன்றென்று கதறும் வைராக்கியம் பூண்டவர்களே! நீங்கள் எவ்வளவு மூடர்கள். எதற்காக இவ்வுலகில் எவ்வித சுகானுபவங்களுக்கு மேற்ற வஸ்துக்களெல்லாம் இவ்வளவு மிகுதியாக உண்டாக்கப்பட்டிருக்கின்றன! எதன் நிமித்தம் இப்புவியில் வாசனைமிகுந்த புஷ்பங்களும், மதுரமான பழங்களும், ஆடுமாடுகளும் அளவின்றிப் பரப்பப்பட்டிருக்கின்றன. யாதுபற்றி சமுத்திரத்தில் கணக்கற்ற மீன்கள் நிறைந்து நீந்துகின்றன. எதன் நிமித்தம் பட்டுப்பூச்சிகள் பட்டு நூற்கின்றன. என்னபயன்கருதிப் பூதேவி, வெள்ளி, தங்கம், இரத்தினங்கள் முதலிய சிறந்த

பொருள்களைத் தனது கருப்பத்துள் அடக்கிவைத்திருக்கின்றனள். இவையெல்லாம் மனிதர் பொருட்டே யன்றோ; மானுடன் என்பானுக்குப் புதிது புதிதாகத் தோன்றும் சுகாபிலாஷையைத் தீர்த்து ஆநந்தத்தை யுண்பிக்கக் கருதியன்றோ! இவ்வாறு அவைகளை அநுபவியாது உலகமுழுதும் வைராக்கியம்பூண்டு மாமிசாகாரங்களை விட்டுக் காய் கிழங்குகளையே உண்டு அருவிநீரையே அருந்தி மரவுரியையே தரிப்பாராகில் சிருஷ்டிகர்த்தாவை அவமானஞ்செய்ததாகும். அப்பொழுது அவனது ஐசுவரியத்தி னளவைச் சிறிது மறியாமலே அதை அவமதித்து, அவனையும், அடைகாத்து எவருக்குமியாத கருமிபோல் பாவித்து, இவ்வுலகக் குடும்பத்தில் அவனுக்குரிய புதல்வர்கள்போல நடவாது முறைதவறிப் பிறந்த கள்ளப்பிள்ளைகள் போல நடப்பதாகுமன்றோ. மேலும் உலகுக்கே தன் பொருள்களின் மிகுதியால் இடையூறு விளையுமே. வானம் அப்பொழுது ஒரே பக்ஷிமயமாய் விளங்கி மறைபட்டுப்போம். ஆடுமாடுகள்பெருகி மனிதர்கள் கைவயப்படாமல் உலகத்தைக் காடாக்கிவிடும். சமுத்திரமும் காந்தியுள்ள மணிகள் நிரம்பப்பெற்று வயிரமிழைக்கப்பட்டுச் சோதிமயமாய் மின்ன நீர்மனிதர்கள் அக்காந்திமிகுதியைப்பார்த்து வரும் பழக்கத்தால் முச்சுடர்களையும் அலட்சியம் செய்

வார்களே. இவையெல்லாம் இயற்கை நெறியல்லவே. பெண்ணே நீயும் உனது வெட்கத்தை ஒழி; கற்பு என்னும் பொய்ந் நாமத்தை நம்பி ஏமாறுதே. அழகு என்பது தெய்வ கற்பிதமான ஓர் நாணயமன்றோ. அஃது எப்பொழுதும் வழங்கிவர வேண்டியதே யன்றி ஒருவரிடத்தும் ஒருங்கு சேர்தல் கூடாது. புதைத்துவைப்பது அதன் பிரயோசனமன்று. அதைப்பலருடனும் கூடி ஆண்டு அனுபவிப்பதே அதன் பயன். அதனை யேற்ற பருவத்தில் அனுபவியாது விட்டால், அஃது, எவராலும் வேண்டப்படாமல் காட்டில் வாடியுதிரும் மலர்போலாம். அது காட்டில் எறித்த நிலவுபோலுமன்றோ. அழகு உலக வாழ்வின் மேன்மையை விளம்பரஞ் செய்யுமோர் பேரான ஆபரணம். மக்களின் சரீரத்தினுள் உலாவிப் பிரகாசித்து மெச்சப்படுவதன்றோ அதனியல்பு. சாமான்ய அகத்தினழகேயன்றோ அகத்தினுள் அடங்கியிருக்குப. இற்றெறுழில் செய்துவர விளக்கமற்ற முகமும் துலக்கமற்ற கபோலமும் அமையாவோ? சந்திரனுக்கு மறுவுண்டாக்கிய முகமும், வில்லை வளைத்த புருவமும், கயலை ஒத்த கண்ணும், வள்ளை நிகர்த்த மூக்கும், பவளத்தைப்பழித்த வாயும், முல்லையைப் பழித்த முறுவலும், சங்கை நிகர்த்த கழுத்தும், வேய்போன்ற தோளும், காந்தள் காட்டிய கையும், அரம்பை போன்ற துடையும்,

அன்ன நடையும், மின்னலிடையும் அதற்கு வேண்டுமோ? இவை யெல்லாம் தக்க பயனுற வேண்டுமன்றோ? ஏ மாதுசிகாமணியே!

"நுண்ணறி வுடையோர் நூலொடு பழகினும்
பெண்ணறி வென்பது பெரும் பேதைமைத்தே."

என்றபடி அறியாமையே மேற் கொளாமல் இவற்றின் பயனை ஆலோசித்து இன்பம் துய்ப்பாயாக.

குண.—இந்த அசுத்தமான இடத்தில் வாய்திறந்து பேசவும்பொருந்தவில்லை. ஆனால் நீ உன் வஞ்சகப்பேச்சினால் மெய்போற்காட்டி என்னை ஏமாற்றிவிட்டதாக எண்ணுகிறாயே; அதை யொழிக்கும்பொருட்டே சிற்சில மொழிகள் பகருவேன். துன்மார்க்கர்கள் வெகு நியாயம்போலப் பேசியதாகக் காட்டுவதையும் சன்மார்க்கர்கள் பேசாதொழியவேண்டி யிருத்தலையும் பார்க்க வெகு வருத்த முண்டாகின்றது. ஏ வஞ்சக! இவ்வளவு பெருக்கமாய்ப் பொருள்களைப் புவியில் படைத்திருப்பது நீ அவைகளை மிதமிஞ்சி அனுபவித்துக்களிப்புற்று, அக்களிப்பு மயக்கத்தில் இவைகளைப் படைத்தருளிய உலகமாதா விடத்து நன்றி மறந்து சிற்றின்பத்தில் உழலும் பொருட்டன்றடா பேதாய். அங்ஙனஞ் செய்தல் தருபை கொய்தற்கீந்த சூரியால் பசுவின் வாலை அறுப்பதற்கொக்குமன்றோ. ஆனால் அவைகளை அவள் தந்தது அவைகளைத் தக்கவழி

உபயோகித்து அனுபவிக்கும் சன்மார்க்கர்கள் பொருட்டே. வளம்படப் பொருள் படைத்தவர்கள், தாங்கள் தகாத வழிகளில் செலவிடுவதை இப்பொழுது நிராதரவாய் வருந்தும் ஒவ்வொரு நல்லவர்க்கும் தக்கவாறு கொடுத்து உதவுவாராயின் அவர் தாம் பொருள் படைத்ததற்குப் பயனுவதோடு உலகும் இடையூறு நீங்குவதன்றி, கடவுளும் உவப்பு அடைவாரன்றோ. இதுவன்றோ கடவுளைத் துதிசெய்யுமுறை. அவ்வாறன்றி மிதமற்றுச் சிற்றின்பத்தை அனுபவிக்கும் மயக்கத்தில் அவரை அறிந்து துதி செய்து அவர் பக்கல் நன்றி செலுத்தவு மிடமுண்டோ? இன்னு மிகை படக் கூறியென்! நீ கற்புடைமகளை இகழ்ந்து பேசுவாயன்றோ? சூரிய கிரணம்போலத் திகழும் நிர்மலமான அக்கற்பின் சக்தியை உனக்குக்கூறிப் பயன் யாது? உன் பாவிச்செவியில் அதனைப் புகட்டுவானேன்! அதன் மகிமையை உன்னால் அறியவுங் கூடாதே. உனக்கு உன்வழியி லுழல்வதே சரி. உனது சமத்காரத்தையும் உனது குறிப்புமொழியையும் நீயே வியந்து ஆனந்தமுறு. நீ நல்வழிப் படுதற்குரிய உபதேசம் பெறுதற்குரியையல்லை. ஆயினும் உன்னை நல்வழிப் படுத்தக்கருதிக் கற்பின் மகிமையைக்கூறி மெய்யறிவைப் புகட்ட முயலுவேனாகில் நான் பரவசமடையுமாறு எழும் உற்சாக மிகுதியால் இவ்

விடத்துள்ள மரமும் மட்டைகளுமிரங்கி இப் புலியும் கரைந்து, வாய்திறந்து, உன்னையும் உன் கணத்தையும மந்திரசாலையுடன் பாதலவுலகில் உய்க்குமன்றே.

மோ.—(தனியே) அவள் சொல்லுவது வெறுங் கட்டுக் கதையன்றே. யாரோ ஒரு தேவன் அவளிடத்துக் குடிகொண்டு இங்ஙனங் கூறுகின்றான் போலும். யான், அமரருளொருவனுயினும், வாசவனது வச்சிராயுதத்தின் ஒலியைக்கேட்டு நடுங்கும் துஷ்ட அசுரர்கள்போல், எனது மயிர் சிலிர்த்து உடம்பு நடுங்குகின்றது. ஆயினும், அவள் கூறினதை மதியான்போல் நடித்து, அவளை இன்னும் செவ்விதிற் சோதனைபுரிவேன்.

(அம்மாதினை நோக்கி) போதும், இந்தத் தத்துவங்களிற்க. நீ கூறுவன யாவும் எமது கோட்பாட்டிக்குச் சிறிதும் பொருந்துவன வல்ல. இனி இதற்கெல்லாம் இடங்கொடேன். ஈண்டு அறைந்த யாவும் நின்மனத் துன்பத்தாலுண்டாய தளிர்ச்சிபற்றிப்போலும். இதைச் சிறிது பருகின் அத்தளர்ச்சி நீங்கிக் கனவிலும் நினைதலரிய களிப்பினை யடைவாய்.

(மீண்டும் குடி என்று வற்புறுத்த.)

அத்தருணம் அவளுடைய சகோதரர்கள் வாளுருவி ஆங்கு வந்து அடைந்து மோகனன் ஸ்படிக பாத்திரத்தைப் பிடுங்கிப் பூமியில் உடைக்கிறார்கள். அப்பொழுது போர் தொடங்கிய அவனும்அவனது பரிவாரங்களும் புறந்தந்தோடினர். பிறகு கண்ணன்வேடம் பூண்டிருந்த தேவபுருஷன் கூறுவான்.

கண்.—அப்பாதக மந்திரவாதியை விட்டுவிட்டீர்களே. அவன் தடியைப்பிடுங்கி அவனைக் கட்டிவைத்திருக்க வேண்டும். அக்கோலைத் தலைகீழாகப் பிடித்து, அம்மாந்திரிகன் மந்திரத்தைத் தலைகீழாக உச்சரித்தாலன்றி நமது கண்மணியை அவன் மந்திரத்தின் கட்டினின்றும் விடுவிக்கவொண்ணாதே. ஆனாலும் இருங்கள். விசனப்படவேண்டாம். முற்காலத்தில் பிரசித்திபெற்ற மாந்திரிகனொருவன் எனக்குக் கூறியுள்ள ஒருவழி ஞாபகத்துக்கு வருகின்றது.

இவ்வனத்துக்குரியதேவதை பொஸந்தி என்று ஒருத்தியுளள். அவள் முற்கலில் பத்ரன் மகனாகிய லோகபாலன் பெண்; மிகவும் பதிவிரதா சிரோமணி. அவள் தன் மாற்றாந்தாய் கோபத்துக்குப் பயந்து இக்காட்டிற்கு ஓடிவந்து வழிதிகைத்துத்திரிய, இவ்விடத்தில் நர்த்தனஞ்செய்து விளையாடிக்கொண்டிருந்த தெய்வமகளிர் அவளைக்கண்ணுற்றுத் தேவலோகம் எடுத்துப்போய்த் தேவேந்திரன்முன் நிறுத்தினார்கள். அவன் அவளது வரலாற்றைக்கேட்டு இரங்கி

அவள் அழகையும் மேன்மைக்குணத்தையும் மெய்ச்சி, வாசனைத் தைலங்களால் மஞ்சனமாட்டி, நல்லுணவுகள் ஊட்டி, மாறுடத் தன்மையைப் போக்கி இக்காட்டுக்குரிய தேவதையாக்கினாள். இப்பொழுதும் தனது பழைய அமர்ந்த கன்னித் தன்மை நீங்காது அந்திப் பொழுதில் வெளியே உலாவி, பேய், பிசாசுகள் இழைக்கும் துன்பங்களை நீக்கிச் செல்வது பற்றி இத்தேவதையை வருஷமொருமுறை இவ்விடத்து ஆடு, மாடு மேய்க்கும் இடையர்கள், பாட்டுக் கூத்துக்களாலும் புஷ்பார்ச்சனைகளாலும் வணங்கி உற்சவம் கொண்டாடுவது வழக்கம். அவளைத் தக்கவாறு துதிசெய்து கீதம்பாடி யழைத்தால் அவள் வந்து மந்திரத்தை நீக்கி மாயத்தை மாய்ப்பதாகச் செவியுற் றிருக்கின்றேன். இன்னும் தன்னைப்போன்ற கற்புடை மகளிரிடத்துப் பரிவு கொண்டு அவர்களுக்கு ஆபத்துக்காலத்தில் உதவுவாளென்றும் கேள்வியுண்டு. அவளை நாம் இப்பொழுது இனிய இசையால் அழைத்து நமக்கு வேண்டிய உதவியைத்தேடுவோம்.

பேரெழிலார்ந்த பெண்ணணங்கே! நல்
அன்பே யுருவா மரிவையர்க் கரசே !
மாற்றாந் தாயுனை வருத்திய பொழுதிக்
காட்டிடை வந்து கலங்கிய நாளிலுன்
அழுகுரல் கேட்டவ் வமரர்க் கிறைவன்
உன்பா லருள்கொண் டுன்னையவ் விசும்பில்
எடுத்துச் சென்றுனைக் கின்னமு தூட்டி

மணநெய் யாட்டி மருமலர் சூட்டி
அணிபல பூட்டி யன்பு பாராட்டியிச்
செழிய வனத்திடைத் திரிதரு முயிர்களைக்
கருணையிற் பாது காத்திடா யென்று
வனதே வதையா வைத்தன னன்றோ!
ஆதலி னல்யா மரும்பெறற் கற்பின்
திறத்தினிற் சொலுமுறை செவிக்கொ ளாயின்றே
கற்பி னொழுக்கமே கலனெனப் பூண்ட
மாதிவ ளிந்த வனத்திடை வஞ்சர்
மாயத்தி னுள்ளே மயங்கின ளியம்
மாய நீக்கியுண் மகிழ்வுண் டாக்கி
எங்கள் வேண்டுகோ ளீந்திடக்
கண்முன் வந்து கருணைசெய் யாயோ!
மங்கையர் தெய்வமாம் வாஸந்தி யன்னையே.

இங்ஙனம் பாடுகையில் வாஸந்திதோன்றிக் கூறுகின்றாள்:

எண்சீராசிரிய விருத்தம்.

கொடியார்ந்த விப்பெரிய மரத்தின் கீழெங்
கொழுமணிகள் குயிற்றியநற் பச்சை வண்ண
நடையாடும் பெருவேகத் தேர்போய் நிற்ப
நாமதினின் றிறங்கிநிலந் தோயா வாய
அடியிணையித் தருவின்மேல் வைத்து நின்றே
மாமேய்க்கு மிடைக்குலத்துக் கரசே! யிங்குன்
கடியாத விண்ணப்பங் கருதி வந்தேங்
காரியமின் றின்னதெனக் கழறு வாயே.

இராகம் : உசேனி.—தாளம் : ரூபகம் :

கண்ணன்

மாதிவடன்னைக் காக்கவேண்டுமே-வஞ்சனை செய்வோர்
மாயத்தினின்று நீக்கவேண்டுமே.

கற்பின்தெய்வமிக் காரிகை யம்மா - இக்காட்டிற் பாதகர்
கைவயப்பட்டுக் கலங்கினாள் சும்மா.

வலையிற்சிக்கிய மானே போலவே - வருந்தினாளிந்த
மாயக்காரர்கள் மயக்கிற் சாலவே.

தீயுங்குளிரச் செய்ததில்லையோ - சிலைவேடனீறாகச்
செய்ததுபோல் நீ செய்தல் தொல்லையோ. [டுப்

பெண்ணொன்றாலொரு பேயு மிரங்குமே - ஒருபெண்பொருட்
பெரிதுதவி செய்தது குரங்குமே.

கற்பினிலிவளைக்காத்திடாய் நின்றே - காதகர்மாயக்
கட்டிலிருந்து கழற்றுவாயின்றே.

வாஸந்தி.—

இராகம் : யமுனாகல்யாணி - ஆதிதாளம்.

கற்புடை மாதரைக் காப்பாற்றுவதென்றன்
கடமையாகு மன்றே
கரைந்துளம் வருந்துமிக் கற்பரசியினது
கட்டொழித்திடல்நன்றே

மந்திரநீரையிம் மங்கைதன் முகத்திலும்
மார்பிலுமேதெளிப்பேன்
மஞ்சத்திலுமிவ் வனத்திலுந் தெளித்துநல
வாழ்விவள்தனக்களிப்பேன்.

மாயவாழ்க்கையர்செய் வஞ்சனை யோடிவள்
வருத்தமு நீங்கியதே

மங்கையர் தங்கட்கு வன்றுணையாய்க் கற்பும்
 வளம்பெற வோங்கியதே.

கற்பின் தெய்வமிக் காரிகை தனைநான்
 காத்தது மிகநன்றே
கருதியென் வாணிற் செல்வேன் நல்லுயிர்காள்
 களித்திருப்பீர் சென்றே.

நல்லொழுக் கந்தனி னிற்பவர் தமக்கு
 நாளுங் குறையில்லை
ஞாலந்தனிலவர் புகழினுக் கொருவர்
 நாட்டலாமோ வெல்லை.

கற்புடை யார்போற்கனத்ததெய் வம்வேறு
 காணக்கிடையாது
கற்பேயுலகினைக் காக்குமென் முலந்தக்
 கற்பினும் பெரிதேது.

(என்று சொல்லிப்போகிறுள்.)

கண்.—(வாஸந்திகையை நோக்கி), வந்தனம் தந்தனம் தேவி! உனது மனம் எக்காலத்தும் குளிர்ந்திருக்க; உனது காடு எப்பொழுதும் தழைத்துவளர்ந்து ஓங்குக; உன்னிடத்து மல்லிகை, முல்லை, சண்பகம், நாகம், புன்னாகம், கேதகி, பாரிஜாதம், பாதிரி முதலிய பரிமளப்பூக்கள் என்னான்றும் மணங்கமழ்க; கற்பகம் முதலிய தேவதருக்கள் நன்மணம் பெறுவதும ஆகாயத்தை முட்டியெழும்பும் நினது வனத்தின் நனமணத்தாலே யன்றோ! அன்றியும் நின்னிடத்தே யுள்ள குங்குமப்பூக்கள் ஆற்றுநீர்ப் பெருக்கொடு கடலில்

சென்றமையாலன்றோ அந்நிவானம் செந்நிறமடைந்தது ; மேலும்,

“ ஆரமும் அகிலும் நாறும் அருவியுஞ் சுனையுமத்த
வாரணம் பிடிகளோடு வாரிதோய் கானியாறு
மீரமு நிழலும் காயுங் கனிகளும் யாவுமீண்டிக்
காரினம் பொழியுமந்தக் கானகத்தழகு கண்டார்.’

என்றது நின்னழகை நோக்கியன்றோ ! பின்னும நீ உன்னிடத்துவந்த விருந்தினரை எக்காலத்தும் பலவகைப் பலன்களினலுபசரிக்கின்றாயே. மேலும் உலகினிற்குறும் எல்லாப் பிணிகளையும் ஒழிக்கப்பலவகை மூலிகைகளும் நிரம்பப் பெற்றுள்ளாய் ; நின்னை நம்பியன்றோ ‘தன்வந்திரி’ என்பார் உதித்தார்போலும். இராமன் பாண்டவர் முதலியோர் நாட்டினிற்போற் காட்டினும் வதிய உதவி புரிந்ததும் நின்கருணையன்றோ; உன்னுதவியில்லாவிடில் ஆலயம் முதலிய யாவும் கட்டப்பட்டு அமைதலெங்ஙனம்; எல்லாப்பொருள்கட்கும் காரணமான மேகம் மழை வழங்குவதும் நின்னுதவியாலேயன்றோ ; இஃதிருக்க, இன்னும் ‘ சிங்கமும் துதிக்கை மாவும் சேர்ந்துடன்றிரிய’ப் பகைப்பொருள்கள் ஒன்றுபட்டு வாழ்வதும் உனது பெருமையன்றோ ; பலபடப் பன்னியுரைப்பானேன்? நின்கண் தோன்றும் மூங்கிலின் முத்துக்களன்றோ தேவர்களுக்கு ஆரமாகின்றன !

(பின்பு, குணமாலிகையை நோக்கி), போவோம், வா, கண்ணே! தெய்வ சகாயமிருக்குங் காலத்தே இக்கொடிய விடத்தினின்று மகலுவோம். ஒருகால் அம்மந்திரவாதி வேறு உபாயங்களால் நம்மை மறுபடி தன் வலைக்குட்சிக்கச்செய்ய யத்தனிக்கவுங்கூடும். ஒரு க்ஷணப்பொழுதளவும்வீண் போக்காமல் ஒரு பேச்சுக்கூடப் பேசாமல இப் பாதகன் நிலத்தைவிட்டு நீங்குவோம். இவ்விருண்ட காட்டில் நான் முன்செல்லு வழிகாட்டுவேன். உங்கள் பெற்றோரில்லமும் சமீபத்திலேயேயிருக்கின்றது. அவ்விடத்தே உங்கள் தந்தையார் முடிசூடிய களிப்பிற் குடியானவர்கள் குரவைக் கூத்தாடி அகமகிழ்ந்துகொண்டிருக்கின்றனர். அவ்வேளை நாம் நால்வரும் புகுந்து அவர்கள் சந்தோஷத்தை இரட்டிப்போம். வாருங்கள் நாம் வேகமாய்ச் செல்வோம். (சென்று அரண்மனையை அடைந்து குடியானவர்களை நோக்கி:—

நின்மினோ குடிகாணின்மி னிறுத்துநுங் கூத்தை யிங்கு
நன்மைசேர் வான மாதர் நர்த்தனத் தினுமே லாக
மன்மத னுவக்கு மேனி மாந்தர்க ளரவ மின்றித்
தொன்மைசேர் கூத்தை யாடத் தோன்றுவர் கண்டீ ரன்றே.

(அச்சிறுவர்களின் தாய் தந்தையர்களை நோக்கி)

சீரார்ந்த தந்தையரே தள்ளை யாரே
தீதிலொரு சந்தோஷந் தெரிப்பே னும்மிவ்
வேரார்ந்து வளர்ந்தகிளை மூன்றை நோக்கு
மிளமையிலின் னோர்க்கிடையூ றெய்து வித்துப்

பேரார்ந்த விவர்பொறுமை வாய்மை கட்குப்
பெரிதுவந்து சிற்றின்ப வெற்றி பெற்ற
சீரார்ந்த புகழ்முடிசே ரிவரை யிந்த
திருத்தமத னுக்கிறைவ னியமித் தானே.

கலைந்திட ரின்று நீங்கள் களைமுடை யீர்கா ளுங்கள்
குலந்தரு கிளைகள் மூன்றுங் குலவிய விளமைக் கண்ணே
துலங்குற வுலகி லென்றுஞ் சோதனைப் பட்டே ஞான
நலந்திகழ் பக்தி வாய்மை நண்ணினர் காணு மாதோ.

என்று சொல்லி அப்புதல்வர்களைப் பெற்றோரிடம் ஒப்புவித்துச் சண்ணன் வேடம்மாறித் தேவ புருஷன் கூறுகின்றான் :

தேவ.—நான் என்வானுலகம் ஏறுவேன். அஃது எல்லாராலும் புகழப்படுவதாயும் ஒப்புயர் வில்லாததாயும், ஆநந்தம் விளைவிப்பதாயு முள்ளது. அவ்வுலகம் மூப்புப்பருவம் அறியாது; எவ்வகை இன்பத்தையும் ஒருங்கேதுய்க்க உரியது; காலவரையறை இயலப்பெறாதது; கதிரா யிரம்ரவி கலந்தெறித்தா லொத்த அளவிடக் கூடாத ஒளியினை யுடையது; இன்னும்,

"வண்டின முரலுஞ் சோலை மயிலின மாலுஞ் சோலை
கொண்டல்மீ தணவுஞ்சோலை குயிலினங் கூவுஞ்சோலை
அண்டர்கோ னமருஞ் சோலை" என்றபடி பல வகையாக வியந்து கொண்டாடும் படியான சோலைகளை யுடையது. அச்சோலைகள் செந்தாமரை, வெண்டாமரை, செவ்வல்லி, கருங்குவளை முதலிய எக்காலத்தும் மலர்ந்து, நாளா அன்

ளம் முதலிய பறவைகள் நிறைந்து, சான்றோர் செய்த நூற்பொருள்போலாழ்ந்து, அவர் அறிவேபோல் தெளிந்து, அன்னோர் புகழே போல்பரந்து, அவரது ஹிருதயம்போல் குளிர்ந்துள்ள மாநஸ ஸரஸு போன்ற பலவாவிகள் நிறைந்திருக்கப்பெற்றன. அச்சோலைக்கண் செல்லும் ஆறுகள் காமதேனுவின் மடிசுரந்த பால் வெள்ளமேயாம். ஆங்கு மலர்களினின்று பெருகும் மகரந்தமே ஆங்குள்ள மரங்களைப் பொன்னிறமுடையதாய்ச் செழுப்பிக்கும்? கற்பகம் முதலிய தேவதருக்கள் நிலைத்து அவரவர்கள் அபீஷ்டங்களை அளிக்கவல்லன. அச்சோலைகளில் ஆரமு மகிலும் நாகம் துகிருபமாகறு முத்து மணியும் பொன்னும் மயங்கி நிரம்பி யுள்ளன நீரிற் சுருட்டி நெடுந்திரைகள் திரையழகு காட்டச் செந்தாமரைகள் விளக்குப்போல் ஒளி செய்ய மதகின் ஒலி மத்தள ஒலிசெய்ய மாங்குயில்கள் தீங்குரலாற் றாங்கிசைபாடக் குவளைகள் கண் விழித்து நோக்க ஒரு நாடகசாலை போலத் தோன்றும் அச்சோலைகளின்கண் மன்மதராஜனுக்கு இரதியுடன் மணம்புரிய இயற்றியதுபோல் விளங்கும் பல லதாகிருகங்கள் உள்ளன. அம்மண நிமித்தமாக வசந்தன் என்னும் அரசர்கோமான் தென்றல் அன்றில குயில் முதலிய சேனைவீரர்களுடன் ஆங்குவந்து எப்பொழுதும் வீற்றிருக்கின்றான் போலும். இவ்வாறு மணம்புரிந்தமன்மதனும் இரதியும்பொன்

மயமான இத்திவ்ய லோகத்தில் தேவர்க ளெல்லா நியமனப்படி இடையறாது வசித்து சேசுநாதரை நேர்மையுடன் ஸ்தோத்திரித்து வருவதுமன்றி உலகில் வரும் கொண்டாட்ட மெல்லாவற்றையு மனுபவித்தலும் நிறைந்திருக்கின்றனர்.

பொன்னொளியி னுண்மிகப் பொலிவதாய்த் திகழ்ந்து
 பொழிகின்ற சாயலினைப்
பொருந்துபிணி மூப்பிறப் பில்லாத தாய்நல
 புண்ணியமி லாச்சரியதாய்.
பன்னரிய பேரின்ப முடையதாய் நலிகின்ற
 பசிதாக மில்லாததாய்
பாருயிர்கள் யாவுமே திடவாக நிப்பதாய்ப்
 பண்புறவி சுப்பிரமைந்தி
மன்னுபெரு வாழ்வுற விரும்புமவர் தாமெலாம்
 வழுவாது நிற்பினென்றும்
மருவியொ னேழுணிந்து வாழ்வரோ ரிடையூற
 வரினுமதை மாய்க்கவர் தமைத்
தன்னொளியி னுலிறைவன் வாழ்விப்ப னென்பதே
 சாற்றினேன் கண்ணோனிச்
சரணியில் வந்தெனது பணிமுடிச் சனனீச்
 தனிவிசுவ பேருமேவனே.

மல்குக வுயிர்களைனைத்து வளமிக வானின் றீப்பா
பல்குக வேள்வி தானம் பயன்றர புவியெங் கோனுறும்
அல்குக வினைகள் யாவும் அமர்கவே றறங்கள் நன்றுப்
டல்குக செங்கோ லனும் புவியினிற் பொலிந்து மன்னே.

முற்றிற்று.

Printed at the Minerva Press, Broadway, Madras